முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபோது, அவர் தொகுதியில் பட்டா கொடுக்கப்பட்டதைப் பற்றி சொன்னார். அவர்கள் தொகுதிக்கு மட்டும் அல்ல, அவர்கள் தொகுதிக்கு எப்படி கொடுக்கப்பட்டதோ அதேபோன்று தமிழ்நாடு முழுவதும் கொடுக்க வேண்டுமென்று புரட்சி தலைவி அவர்கள் உத்தரவிட்டதன்பேரில் கொடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). எல்லா தொகுதிகளும் கவனிக்கப்படுவதுபோலவே உறுப்பினரின் தொகுதியும் நல்ல முறையிலே கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 84, திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

84—

இரும்பை ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் அமைத்தல்

***44500—**திரு. செ. ஆறுமுகம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் ஒன்றியத்தில் இரும்பை ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம்–ராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் ஒன்றியம், வானூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட இரும்பையில் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்திலேயே, அண்ணல் அம்பேத்கார் அவர்கள் கண்ட கனவுகளை இன்றையதினம் செயலாக்கி ஆதிதிராவிட சமுதாய மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வாழவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரே தலைவி எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், தலைமை இடமான வானூரில் 38 படுக்கைகள் கொண்ட அரசு பொது மருத்துவமனையை வரலாறு காணாத அளவுக்கு ஏற்படுத்தித் தந்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய வானூர் தொகுதியில், வானூர் ஒன்றியத்தில் உள்ள இரும்பை ஊராட்சி பெரிய ஊராட்சியாகும். அந்த ஊராட்சியைச் சுற்றி 25 கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சியில் இதுவரையில் ஆரம்பச் சுகாதார நிலையமோ, துணைச் சுகாதார நிலையமோ இருந்தது கிடையாது. ஆகவே அங்குள்ள மக்களுடைய குறையை போக்குகின்ற வகையிலே, 30 கிலோ மீட்டர் தூரம் இடைவெளியில் துணைச் சுகாதார நிலையமே இல்லாத அந்த ஊராட்சியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பையில் துணைச் சுகாதார நிலையம் வேண்டுமென்று கேள்வி இருக்கிறது. அங்கே துணைச் சுகாதார நிலையம் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையம் வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை. ஏற்கெனவே அங்கே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, ஒரு லட்சத்து 53 ஆயிரம் மக்கள் தொகை அங்கே இருக்கிறது என்று கணக்கு சொல்லியிருக்கிறார்கள். கேள்வி துணைச் சுகாதார நிலையத்தைப் பற்றியதாகத்தான் இருக்கிறது.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பையில் துணைச் சுகாதார நிலையமோ, ஆரம்பச் சுகாதார நிலையமோ நிச்சயமாகக் கிடையாது என்பதை தெளிவுபடுத்திக்கொண்டு மீண்டும் சரியான புள்ளிவிவரங்களைப் பெற்று வருகின்ற ஆண்டில் எங்களுடைய இரும்பை ஊராட்சியில் துணைச் சுகாதார நிலையம் அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 5,000 பேர் மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்று இருக்கிறது. இரும்பை ஊராட்சி

என்றால் அந்த ஊரிலேயேதான் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. அந்த இரும்பை பஞ்சாயத்துக்கு உட்பட்ட இடத்தில் எங்காவது இருக்கலாம். எனவே அதை போய் பார்த்துவிட்டு நான் சொல்லுகிறேன். இரும்பை பஞ்சாயத்துக்குள்ளே ஏதாவது ஒரு இடத்தில் நிச்சயமாக அது இருக்கும். அதன் காரணமாகத்தான் இந்தக் குறிப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால ஆரம்பச் சுகாதார நிலையம் என்று கேட்ட காரணத்தால் ஏற்கெனவே 4 அங்கே இருக்கிறது என்று சொன்னேன். அதற்குமேல் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும் மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால் உங்களுக்கு இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுவும் இந்த ஆண்டு முடியாது. அடுத்த ஆண்டு எங்கே வைக்கலாம் என்று ஆய்வு செய்து சொல்லலாம். இரும்பை பஞ்சாயத்துக்குள்ளே துணைச் சுகாதார நிலையம் இருக்கிறதா என்பதை பார்த்து தனியாக நான் மாண்புமிகு உறுப்பினருக்குக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கேட்டிருப்பது, இரும்பை ஊராட்சி என்றுதான், இரும்பை கிராமம் என்று கேட்கவில்லை. எனவே அமைச்சர் சொன்னதுபோல் அந்த ஊராட்சியில் 5, 6 கிராமங்களில் ஏதாவது ஒரு கிராமத்தில் இருக்கலாம். நீங்கள் கேள்வியை 'கிராமத்தில்' என்று கேட்டிருந்தால் சரியாக இருந்திருக்கும். உட்காருங்கள் (குறுக்கீடு). இரண்டு துணைக் கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். உங்களுக்காகத்தான் இதையெல்லாம் நான் சொன்னேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 85, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

85—

வனவிலங்குகளைப் பாதுகாக்க நடவடிக்கை

***19325—**திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலை காடுகள் மற்றும் தமிழகத்தில் உள்ள காடுகளில் உள்ள வனவிலங்குகள் குறிப்பாக மான், காட்டு எருமை, சிங்கம், சிறுத்தை, யானைகள், புலி ஆகியன குறைந்து வருவதை அரசு அறியுமா ?